# வேதாகமத்திலுள்ள இரகசியங்கள்

Pr.K.Joseph

**2. தேவ இரகசியம்:**

**வெளி-10: 6** *இனி காலம் செல்லாது, ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது* ***"தேவரகசியம்"*** *நிறைவேறும்.*

தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கப்பட்ட தேவஇரகசியத்தைக் குறித்து நாம் அறியவேண்டியது என்னவென்றால், இஸ்ரவேலர் அல்லாத புறஜாதிகளாகிய மற்ற தேசத்தாருடைய இரட்சிப்பு (இதில் நாமும் உள்ளடங்குகிறோம்) முழுமைப்படுதலுக்குள் வருதலை அது குறிக்கிறது.

**ரோம-11: 25** *மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன், அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும்.*

சபையைக் குறித்த அதிலும் குறிப்பாக இஸ்ரவேலரல்லாதவர்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்படுதல் என்பது பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வெளிப்படுத்தப்படாத இரகசியமாக இருந்தது.

ஆதிஅப்போஸ்தல காலசபையின் நாட்களில் புறஜாதியாரின் இரட்சிப்பைக் குறித்து இயேசு கிறிஸ்து பேதுருவுக்கு வெளிப்படுத்தியபோது இது அவருக்குப் புரிந்துகொள்ள முடியாத புதிராக இருந்தது.

**அப்-10: 9-14** *பேதுரு ஆறாம்மணி நேரத்திலே ஜெபம்பண்ணும்படி மேல்வீட்டில் ஏறினான். அவன் மிகுந்த பசியடைந்து சாப்பிட மனதாயிருந்தான், அதற்கு அவர்கள் ஆயத்தம்பண்ணுகையில், அவன் ஞானதிருஷ்டியடைந்து, வானம் திறந்திருக்கிறதாகவும், நாலுமுனைகளும் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒருவிதமான கூடு தன்னிடத்தில் இறங்கித் தரையில் விடப்பட்டிருக்கிறதாகவும், அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் ஜீவன்களும், காட்டுமிருகங்களும், ஊரும் பிராணிகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கிறதாகவும் கண்டான். அல்லாமலும்: பேதுருவே, எழுந்திரு, அடித்துப் புசி என்று அவனுக்குச் சொல்லும் ஒரு சத்தம் உண்டாயிற்று. அதற்குப் பேதுரு: அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை என்றான்.*

பூமியிலுள்ள சகல மக்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற தேவனுடைய வெளிப்பாட்டைப் பேதுருவால் புரிந்துகொள்ள முடியவில்லை. புறஜாதிகள் அனைவரும் தீட்டானவர்கள் என்று பேதுரு கருதினார். அவர்கள் தேவனுக்குத் தூரமானவர்கள் என்றே அவர் எண்ணினார். ஆனால் தேவனோ தாம் படைத்த அனைவரையும் மீட்பதில் தம்முடைய அன்பை விளங்கப்பண்ணுகிறார்.

அப்-10: 43 *அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.*

அப்-10: 46 *பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்.*

ரோம-16: 25 *ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான,*